# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07– ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2054, குரோதி வருடம் தை திங்கள் 25–ம் நாள்

## அசல் வழக்கு எண்.154/2021

**[CNR No.TNTI25000609-2022]**

1. எஸ்.வெங்கடேசன்,
2.சி.கலாவதி
3.எஸ்.லட்சுமி .... வாதிகள்

/ எதிர் /

எஸ்.வித்யாசேகர் .... பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்னர் 24.01.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன்ராஜ், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.சாகுல்அமீது அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகததால், பிரதிவாதி ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டும், சாட்சிய மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை, இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்……

## தீர்ப்புரை

தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து நான்கு சமபாகங்களாக பிரித்து, அதில் மூன்று பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து, வாதிகளுக்கு, தனி சுவாதீனம் கொடுக்கும்படி முதல் நிலை தீர்ப்பாணை வழங்கக்கேட்டும், மற்றும் இவ்வழக்கு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்தக்கேட்டு, வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>**

1,2 வாதிகளுக்கு, பிரதிவாதி உடன்பிறந்த சகோதரர் ஆவார். 3-ம் வாதி, 1,2 வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்களுக்கு தாயார் ஆவார். தாவாச் சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனரான சுந்தர்ராஜ் என்பவருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். தாவாச் சொத்துக்களையும், வேறு சொத்துக்களையும் 1,2 வாதிகளின் தகப்பனார் சுந்தர்ராஜ் என்பவர் தன்னுடைய உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி என்பவருடன் 13.04.2015 அன்று பாகம் செய்து கொண்டுள்ளார். 13.04.2015-ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் தாவாச் சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனாரும், 3-ம் வாதியின் கணவருமான லேட் சுந்தர்ராஜ் என்பவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. பாக தேதிக்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை சுந்தர்ராஜ் என்பவர் அறுதியான சுவாதீனத்தில் வைத்து வாதிகள் மற்றும் பிரதிவாதியுடன் சேர்ந்து அனுபவித்து வந்துள்ளார்.

**2.2)** 1,2 வாதிகளின் தகப்பனாரும், 3-ம் வாதியின் கணவருமான லேட். சுந்தர்ராஜ் என்பவர் தனக்கு பாக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் 26.06.2020 அன்று காலமாகிவிட்டார். மேற்படி சுந்தர்ராஜ் என்பவருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதி மட்டுமே வாரிசுதாரர்கள். மேற்படி சுந்தர்ராஜ் என்பவர் காலமான பின்னிட்டு தாவாச் சொத்துக்களை வாதிகளும், பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள். சுந்தர்ராஜன் என்பவர் உயிருடன் இருக்கும்போதே பிரதிவாதி தன்னுடைய மகனான கிஷோர் என்பவருடன் சேர்ந்து கொண்டு தாவாச் சொத்துக்களில் பாகம் கோரி 1,2 வாதிகள் மீதும், அவர்களது தகப்பனரான சுந்தர்ராஜ் மற்றும் அவரது உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி ஆகியோர் மீதும் உடுமலைப்பேட்டை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.108/2015 -ஐ தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து நடத்த முன்வராத காரணத்தினால், 17.08.2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. தாவாச் சொத்துக்களை வாதிகள், பிரதிவாதியுடன் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வருவதில் சிரமங்கள் ஏற்பட்டதால், வாதிகள் தாவாச் சொத்துக்களில், தங்களுக்குரிய 4-ல் 3 பங்கை பிரித்து தனி சுவாதீனம் பெறுவதற்காக பாகம் செய்து, பதிவு செய்து கொள்ளலாம் என்று

தெரிவித்தபோது பிரதிவாதி காலம் கடத்தி வந்துள்ளார்.

**2.3)** தாவாச் சொத்துக்களை 4 சமபாகங்களாக பிரித்து அதில் 3 பாகத்தை வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் கேட்டு, வாதிகள் 24.12.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 28.12.2020 அன்று பெற்றுக்கொண்டு, 30.12.2020 அன்று பொய்யான காரணங்களை கூறி, பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்குண்டான பங்கு பாத்தியத்தை மறைத்து, வில்லங்கப்படுத்தும் நோக்கத்தில் பிரதிவாதி செயல்பட்டு வந்ததால், வாதிகள், தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து நான்கு சமபாகங்களாக பிரித்து, அதில் மூன்று பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து, வாதிகளுக்கு, தனி சுவாதீனம் கொடுக்கும்படி கேட்டும், மற்றும் இவ்வழக்கு செலவுத்தொகையும் செலுத்தக்கேட்டு, வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம் :**

வாதியின் தாவா சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆகிய உடுமலைப்பேட்டை தாலூக்கா, சோமவாரப்பட்டியில் பட்டா எண் 84, க.ச.440 பட்டா எண் 83, க.ச.எண்.430, கோட்டமங்கலம் கிராமத்தில் பட்டா எண் 77 க.ச.எண்.527 பட்டா எண் 130 க.ச.எண்.539, 539/2, 539/5, 539/3 உள்ள பூமிகள் மற்றும் பொட்டிநாயக்கனூர் கிராம ஊர்க்கட்டில் உள்ள புதிய புல எண்625/13ல் உள்ள காலிமனையிடம் ஆகியவவை ஆதியில் 1மற்றும் 2-ம் வாதிகள் மற்றும் பிரதிவாதியின் பாட்டனார் கோவிந்தசாமி நாயுடுவிற்கு 25.02.1948-ம் தேதிய உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 396/1948-ன் படி பாத்தியப்பட்டது. மேற்படி சொத்துக்கள் இந்து கூட்டுக் குடும்ப, பொதுக் குடும்ப உபயவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்களாகும். கோவிந்தசாமி நாயுடு மேற்படி சொத்தை தன் ஆயுட் காலத்தில் தன் குடும்பத்துடன் சேர்ந்து தன் சொந்த சுவாதீனத்தில் வைத்து விவசாயம் செய்து குடியிருந்து, பொதுவில் வைத்து அனுபவித்து வந்துள்ளார். சுமார் 40வருடங்களுக்கு முன்பு, தனக்கும், தன் சொத்துக்களுக்கும் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களாக தன் மக்களையும், 1, 2

வாதிகளையும், பிரதிவாதியையும் விட்டு விட்டு தாவா சொத்துக்களைப் பொறுத்து எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காமல், காலஞ்சென்று விட்டார். மேற்படி, சொத்துக்களில் சோமவாரப்பட்டி க.ச.440, கோட்டமங்கலம் க.ச.527 ஆகிய நிலங்களின் வருமானத்தைக் கொண்டும், கூட்டுக் குடும்ப உழைப்பைக் கொண்டும், இதர சொத்துக்கள், கோவிந்தசாமி நாயுடு மக்கள் சுந்தர்ராஜ் மற்றும் கிருஷ்ணசாமி பெயரில் உடுமலைப்பேட்டை சார்பதிவக ஆவண எண் 742/1975 மற்றும் உடுமலைப்பேட்டை சார்பதிவக ஆவண எண். 982/2000 ஆகிய கிரைய ஆவணங்களின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தின் வருமானத்தைக் கொண்டு மேற்படியார்கள் பொட்டி நாயக்கனூரில் உள்ள காலிமனை இடசொத்தினை தங்கள் பெயரில் கிரையம் பெற்றுள்ளார்கள்.

**3.2)** தாவா சொத்துக்கள், இதர சொத்துக்கள் அனைத்தும் இந்து கூட்டுக் குடும்ப பொதுக்குடும்ப சொத்துக்கள் ஆகும். பிரதிவாதி கடந்த 13.05.1961 ம் தேதியன்று பிறந்துள்ளார். பிரதிவாதியின் பாட்டனார் கோவிந்தசாமி நாயுடு, பிரதிவாதிக்கு வயது சுமார் 12 ஆக இருக்கும்பொழுது தனக்கும் தன் சொத்துக்களுக்கும் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களாக விட்டு விட்டு, சுமார் 35 வருடங்களுக்கு முன்பு காலஞ்சென்றுவிட்டார். இந்நிலையில் தாவா சொத்து மற்றும் இதர சொத்தின் வருமானத்தைக் கொண்டு, பிரதிவாதி அறியா பருவத்தில் இருந்த பொழுது, வருமான பங்கு பாகத்தை பிரதிவாதிக்கு தனியாகப் பிரித்துக் கொடுக்காமலும், சுந்தர்ராஜ். கிருஷ்ணசாமி ஆகியோர் மூன்று சொத்துக்களை கிரையம் பெறும்பொழுது பிரதிவாதி பெயரிலும், சேர்த்து கூட்டாக கிரையம் செய்யாமல், அவர்கள் பெயரில் மட்டும் மூன்று கிரையங்களை கிரையம் பெற்றிருப்பது தவறானதாகும். கிரயச் சொத்துக்கள் சுந்தர்ராஜ், கிருஷ்ணசாமியின் தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல. அனைத்து சொத்துக்களிலும், பிரதிவாதிக்கு பாகம் உள்ளது. வாதிகள் மறுப்பதற்கு சட்டநிலையில் எவ்வித உரிமையும் நியாயமும் வாதிகளுக்கு எப்போதும் கிடையாது. தாவா பிரதிவாதியின் சித்தப்பாவான கிருஷ்ணசாமி திருமணம் செய்து, அவரது மனைவி சரஸ்வதி 50 வருடங்களுக்கு முன்பு குழந்தைகள் எதுவும் இல்லாமல் காலஞ்சென்றுவிட்டார். அதன் பின்னர் மறுமணம் எதுவும் செய்துக் கொள்ளாமல் குழந்தை வாரிசு எதுவும்

இல்லாமல், பிரதிவாதியின் தகப்பனார் சுந்தர்ராஜ் உடனேயே இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினராகவே ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார். மேற்படி அனைத்துச் சொத்துக்களையும் உபயவாதிகள் ஒன்றாக குடியிருந்து, விவசாயம்செய்து, நாளது வரை எவ்வித பங்குபாகமும் செய்து கொள்ளாமல், பொதுவில் வைத்து அனுபவித்து வந்துள்ளார்கள்.

**3.3)** 2-ம் வாதி ஆகிய பிரதிவாதியின் சகோதரி கலாவதி அவர் கணவர் சின்னச்சாமி இறந்து விட்டபடியால், தன் தகப்பனார், சகோதரர்கள் வசிக்கும் தாவா சொத்தில் வசித்து வருகின்றார். பிரதிவாதியின் தகப்பனார் சுந்தர்ராஜ், சித்தப்பா கிருஷ்ணசாமி மற்றும் வாதிகள் எவ்வித தகுந்த காரணமுமில்லாமல், பிரதிவாதி குடும்பத்தின் பேரில் வீண் விரோதம் பாராட்டிக் கொண்டு, தாவா சொத்துக்களில் பிரதிவாதி மற்றும் அவர் மகன் கிஷோர்க்கு உண்டான பங்கு பாகத்தை மோசம் செய்யும் கெட்ட எண்ணம் கொண்டும் பிரதிவாதியின் சகோதரியான 2ம்வாதி, தான் அதிக இலாபம் அடையும் எண்ணம் கொண்டும் செயல்பட்டு அவருடைய தூண்டுதல்கள் பேரில், தாவா சொத்துக்களைப் பொறுத்து சுந்தர்ராஜ் மற்றும் கிருஷ்ணசாமி ஆகிய இருவரும் உடுமலைப்பேட்டை சார்பதிவு அலுவலக ஆவண எண் 2763/2015 ஆகிய பாக ஆவணத்தை தங்களுக்குள் எழுதியுள்ளார்கள். 1 மற்றும் 2-ம் வாதிகளின் பேரில், தாவா சொத்துக்களைப் பொருத்து தவறான இரு உயில் ஆவணங்களையும் சட்டத்திற்கு புறம்பாக எழுதி வைத்துள்ளார்கள். 1 மற்றும் 2-ம் வாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து, தவறான ஆவணங்களை சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தி கொண்ட விபரம் பிரதிவாதிக்கு தெரியவந்ததால், மேற்படியான இரு உயில் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் O.S.No.108/2015 ஐ தாக்கல் செய்துள்ளார். வழக்கு விசாரணை அன்று பிரதிவாதி விசாரணைக்கு ஆஜராகாததால் தாவா Dismissed for default ஆகிவிட்டது. வழக்கு மறுபடியும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் உள்ளது. பாக ஆவணம் மற்றும் உயில் ஆவணங்கள் சட்ட நிலையில் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதியின் சித்தப்பாவான கிருஷ்ணசாமி தாவாவில் அவசியக் கட்சிக்காரர் ஆவதால், அவசிய சட்சிக்காரராக கிருஷ்ணசாமியை சேர்க்காமல், தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்,

வழக்கு செல்லத்தக்கதல்ல. எனவே, பிரதிவாதியின் செலவு தொகையுடன் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. பிராதில் கோரியுள்ள படி தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு ¾ பாகம் கிடைக்கத்தக்கதா?
2. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

**5.** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், 1–ம் வாதி வா.சா.1 ஆகவும், மற்றொரு சாட்சி வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின்போது வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய முன்வராததோடு பிரதிவாதி தரப்பில், அழைத்தும் ஆஜராகாததால், பிரதிவாதி ஒருதலைப் பட்சமாக்கப்பட்டுள்ளார்.

**6.** வாதிகள் தரப்பில், 1,2 வாதிகளுக்கு, பிரதிவாதி உடன்பிறந்த சகோதரர் என்றும், 3–ம் வாதி, 1,2 வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்களுக்கு தாயார் என்றும், தாவாச் சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனரான சுந்தரர்ராஜ் என்பவருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவாச் சொத்துக்களையும், வேறு சொத்துக்களையும் 1, 2 வாதிகளின் தகப்பனார் சுந்தர்ராஜ் என்பவர் தன்னுடைய உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி என்பவருடன் 13.04.2015 அன்று பாகம் செய்து கொண்டுள்ளார் என்றும், அந்த பாகப்பத்திரம் வா.சா.ஆ.1 என்றும், 13.04.2015–ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் தாவாச் சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனாரும், 3–ம் வாதியின் கணவருமான லேட் சுந்தர்ராஜ் என்பவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், பாக தேதிக்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை சுந்தர்ராஜ் என்பவர் அறுதியான சுவாதீனத்தில் வைத்து வாதிகள் மற்றும் பிரதிவாதியுடன் சேர்ந்து அனுபவித்து வந்துள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**6.1)** 1,2 மேலும், வாதிகள் தரப்பில், வாதிகளின் தகப்பனாரும், 3–ம் வாதியின் கணவருமான லேட். சுந்தர்ராஜ் என்பவர் தனக்கு பாக வகையில் பாத்தியப்பட்ட

சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் 26.06.2020 அன்று காலமாகிவிட்டார் என்றும், அவரது இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 என்றும், மேற்படி சுந்தர்ராஜ் என்பவருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்றும், வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 என்றும், மேற்படி சுந்தர்ராஜ் என்பவர் காலமான பின்னிட்டு தாவாச் சொத்துக்களை வாதிகளும், பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவாச் சொத்துக்களை பொறுத்து கிராம நிர்வாக அலுவலரால் வாதிகள் மற்றும் பிரதிவாதி பெயருக்கு 02.11.2020 அன்று வழங்கப்பட்ட பாத்திய சான்றிதழ்கள், அடங்கல் கணக்கு வழங்கப்பட்டது என்றும், அந்த பாத்திய சான்றிதழ்கள் வா.சா.ஆ.4 என்றும் அடங்கல் கணக்கு வாசா.ஆ.5 என்றும், சிட்டாக்கள் வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 என்றும் சுந்தர்ராஜன் என்பவர் உயிருடன் இருக்கும்போதே பிரதிவாதி தன்னுடைய மகனான கிஷோர் என்பவருடன் சேர்ந்து கொண்டு தாவாச் சொத்துக்களில் பாகம் கோரி 1,2 வாதிகள் மீதும், தாவாவில் 1,2 வாதிகள் மீதும், அவர்களது தகப்பனரான சுந்தர்ராஜ் மற்றும் அவரது உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி ஆகியோர் மீதும் உடுமலைப்பேட்டை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.108/2015 –ஐ தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து நடத்த முன்வராத காரணத்தினால், 17.08.2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அந்த தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 என்றும், தாவாச் சொத்துக்களை வாதிகள், பிரதிவாதியுடன் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வருவதில் சிரமங்கள் ஏற்பட்டதால், வாதிகள் தாவாச் சொத்துக்களில், தங்களுக்குரிய 4–ல் 3 பங்கை பிரித்து தனி சுவாதீனம் பெறுதற்காக தாவாச் சொத்துக்களை தனி சுவாதீனம் பெறுவதற்காக தாவாச் சொத்துக்களை பாகம் செய்து, பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்தபோது பிரதிவாதி காலம் கடத்தி வந்துள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**6.2)** மேலும், வாதிகள் தரப்பில், தாவாச் சொத்துக்களை 4 சமபாகங்களாக பிரித்து அதில் 3 பாகத்தை வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் கேட்டு, வாதிகள் 24.12.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், அந்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.10 என்றும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை

28.12.2020 அன்று பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.11 என்றும், 30.12.2020 அன்று பொய்யான காரணங்களை கூறி, பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் அந்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.12 என்றும், தாவா சொத்துக்களுக்குண்டான அரசு வழிகாட்டி மதிப்பு சான்றிதழ் வா.சா.ஆ.13 என்றும் மேற்படி, தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்குண்டான பங்கு பாத்தியத்தை மறைத்து, வில்லங்கப்படுத்தும் நோக்கத்தில் பிரதிவாதி செயல்பட்டு வந்ததால், வாதிகள், தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து நான்கு சமபாகங்களாக பிரித்து, அதில் மூன்று பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து, வாதிகளுக்கு, தனி சுவாதீனம் கொடுக்கும்படி கேட்டு, வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு அனுமதிக்க வேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

<u>7. தீர்வு:-</u>

வழக்கில் வாதிகள் தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.1 மற்றும் வா.சா.2-ன் சாட்சியங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிகள் கட்சி செய்வது போல 1,2 வாதிகளுக்கு, பிரதிவாதி உடன்பிறந்த சகோதரர் என்றும், 3-ம் வாதி, 1,2 வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்களுக்கு தாயார் என்றும், தாவாச் சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனரான சுந்தரர்ராஜ் என்பவருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவாச் சொத்துக்களையும், வேறு சொத்துக்களையும் 1, 2 வாதிகளின் தகப்பனார் சுந்தர்ராஜ் என்பவர் தன்னுடைய உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி என்பவருடன் 13.04.2015 அன்று பாகம் செய்து கொண்டுள்ளார் என்றும், அந்த பாகப்பத்திரம் வா.சா.ஆ.1 என்றும், 13.04.2015-ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் தாவாச் சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனாரும், 3-ம் வாதியின் கணவருமான லேட் சுந்தர்ராஜ் என்பவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், பாக தேதிக்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை சுந்தர்ராஜ் என்பவர் அறுதியான சுவாதீனத்தில் வைத்து வாதிகள் மற்றும் பிரதிவாதியுடன் சேர்ந்து அனுபவித்து வந்துள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**8.** 1,2 மேலும், வாதிகள் தரப்பில், வாதிகளின் தகப்பனாரும், 3-ம் வாதியின்

கணவருமான லேட். சுந்தர்ராஜ் என்பவர் தனக்கு பாக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் 26.06.2020 அன்று காலமாகிவிட்டார் என்றும், அவரது இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 என்றும், மேற்படி சுந்தர்ராஜ் என்பவருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்றும், வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.** பிரதிவாதி தரப்பில் பல்வேறு விபரங்களை கூறி, எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தாலும், வேறு சொத்துக்களை சேர்க்காமல், வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அவசிய தரப்பினரான கிருஷ்ணசாமி என்பவரை வழக்கில் சேர்க்காததால், வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறினாலும், அதற்கு வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் வழக்குரையில் பூர்வீக சொத்துக்கள் தொடர்பான 13.04.2015 அன்று பாகப்பிரிவினை மேற்கொள்ளப்பட்டுவிட்டதால், கிருஷ்ணசாமி அவசிய தரப்பினர் அல்ல என்றும், இதர சொத்துக்களை பொறுத்தவரை 13.04.2015 ஆவணத்தில், பாகப்பிரிவினைக்குட்படுத்தப்பட்டுவிட்டதால், வேறு சொத்துக்கள் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறுவதும், ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும், பிரதிவாதி பல்வேறு விபரங்களை தெரிவித்திருந்தாலும், அதனை உறுதி படுத்துவதற்கு நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடத்த முன்வரவில்லை. வழக்கு ஆவண சாட்சியங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றே தெரியவருகிறது.

**முடிவில்,**

தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து நான்கு சரி சமபாகங்களாக பிரித்து, அதில் 3 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து, முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், இறுதி நிலைத்தீர்ப்பாணைக்காக மனுதாக்கல் செய்ய வழக்கு 04.03.2025–க்கு ஒத்தி வைத்து தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக

சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/–திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>

வா.சா.1 – வெங்கடேசன் (1–ம்வாதி)

வா.சா.2 – அஜய்குமார்.

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :–</u>

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.04.2015 | சுந்தர்ராஜ் மற்றும் அவரது சகோதரர் கிருஷ்ணசாமி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட பாகப்பத்திரம் - சான்றிட்ட அலுவலக நகல் |
| வா.சா.ஆ.2 | – | இறப்பு சான்றிதழ் - நகல் |
| வா.சா.ஆ.3 | 16.10.2020 | வாரிசு சான்றிதழ் - நகல் |
| வா.சா.ஆ.4 | 02.11.2020 | கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய பாத்திய சான்றிதழ் - அசல் |
| வா.சா.ஆ.5 | 02.11.2020 | அடங்கல் கணக்கு - அசல் |
| வா.சா.ஆ.6 | 31.10.2020 | பட்டா - கணினி நகல் |
| வா.சா.ஆ.7 | – | பட்டா - கணினி நகல் |
| வா.சா.ஆ.8 | 17.08.2014 | அ.வ.எண்.108/2015-ன் தீர்ப்பாணை - நகல் |
| வா.சா.ஆ.9 | 17.08.2014 | அ.வ.எண்.108/2015-ன் தீர்ப்புரை- நகல் |
| வா.சா.ஆ.10 | 28.12.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | – | அஞ்சல் ஒப்புதல் அட்டை -அசல் |
| வா.சா.ஆ.12 | 30.12.2020 | பதில் அறிவிப்பு - நகல் |
| வா.சா.ஆ.13 | – | தாவாச் சொத்துக்களுக்கான அரசு வழிகாட்டி மதிப்பு சான்றிதழ் - நகல். |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> இல்லை

ஒம்/–திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

O.S.No.154/2021
Date :07.02.2025
Fair/ Draft Judgment